1971 ஜூலை 23]

ஏற்படுத்த உதவியும் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்பொழுது கால்நடை வளர்ப்பிலே மிக முக்கியமான பங்கு வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக கிராம மக்களை ஈடுபடுத்துவது அவசியம்தான். அப்படி அவர்கள் விண்ணப்பித்தால் அரசாங்கம் பெருமளவில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்யும்.

திருப்பூர் நகருக்கு ஆம்புலன்ஸ் வண்டி.

* 401 வினு.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் திருப்பூர் நகருக்கு ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: இல்லை. திருப்பூர் நகருக்குத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒரு ஆம்புலன்ஸ் வண்டி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த ஆம்புலன்ஸ் வண்டி 4—4—1971 முதல், தற்காலிகமாக உடுமலை பேட்டை நகருக்கு (E.S.I.) நடமாடும் மருந்தக வண்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் உடுமலைபேட்டை நடமாடும் மருந்தக வண்டி செயலற்ற நிலையில் உள்ளது. தவிரவும், உடுமலை பேட்டை ஆம்புலன்ஸ் வண்டியும் பழுதுபட்டுள்ளது. பழுது பட்டுள்ள உடுமலைபேட்டை ஆம்புலன்ஸ் வண்டியை உடனடியாகச் சரிபார்க்க துரித ஏற்பாடுகள் செய்யவும், அதுவரையில் உடுமலை பேட்டைக்கு வேறு வண்டி ஏற்பாடு செய்யவும் திருப்பூருக்கான ஆம்புலன்ஸ் வண்டியை மீண்டும் திருப்பூருக்கே உடனடியாக ஒதுக்கும்படியும், சுகாதார குடும்ப நலத்துறை இயக்குநர் தெரிவிக்கப்பட்டிருக்கிறுர்.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னுர்கள். ஆனுல் போன வாரத்தில் ஆம்புலன்ஸ் திருப்பூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஆம்புலன்ஸ் வண்டியை நடமாடும் மருத்துவ வண்டியாக விடுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டு 15 நாட்களுக்கு மேல் ஆகின்றது. உத்தரவு அனுப்பி வைத்து ஒரு வாரம் ஆகிறது.

Employees State Insurance Hospitals.

* 402 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to increase the number of Employees State Insurance Hospitals in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகள் இப்பொழுது எந்தெந்த இடத்தில் இருக்கின்றன? இந்த ஆண்டு வேறு ஏதாவது புதிய ஆஸ்பத்திரி கட்ட ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, ஈ.எஸ்.ஐ. ஹாஸ்பிடல்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 இடங்களில் இருக்கின்றன. மேலும் அதை விரிவு படுத்த வேண்டு மென்ற எண்ணமிருந்தாலும் நிதி வசதி இல்லாத காரணத்தால் அது இப்போதைக்கு இல்லை என்று கூறுகிறேன்.

நடமாடும் பல்கலைக் கழகங்கள்.

* 388 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

நடமாடும் பல்கலைக் கழகங்களை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மிதக்கும் பல்கலைக் கழகம் என்று சென்னைக்கு வந்ததை அறிவோம். அப்படி மிதக்கும் பல்கலைக் கழகம் நம்மால் அமைக்க முடியாது என்ருலும், நடமாடும் பல்கலைக் கழகம் என்ற பெயர்பெற்றவராக நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இருக்கின்ற காரணத்திஞல் அவர்கள் காலத் திலேயே நடமாடும் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிக்கூடத்தையே நடமாட விட முடியாது. ஆகவே இன்றைக்குக் கல்லூரிகளையோ அல்லது பல்கலைக்கழகத்தையோ நடமாட விடுவது என்பது இயலாத ஒன்று. வேண்டுமென்ருல் ஆசிரியர்களை நடமாட விடலாம், பேராசிரியர்களை நடமாடவிடலாம். உலாவி வரச் செய்யலாம். ஏனென்ருல் விசிட்டிங் ஃபுரொஃபசர்ஸ் என்ற முறையில் இருக்கிருர்கள். பல்கலைக்கழகத்திற்குப் பல்கலைக்கழகம், கல்லூரிக்குக் கல்லூரி பேராசிரியர்களையும் மற்றவர்களையும் வேண்டுமாஞல் அனுப்பலாம். ஆஞல் இப்பொழுது வாஞெலியின் மூலமாகக் கல்வியைப் பரப்பும் முயற்சியில் உயர்நிலைப்பள்ளிகளுக்கும், துவக்கப்பள்ளிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகத்தில் கடிதப்போக்குவரத்தின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்புகளைச் சொல்லிக் கொடுக்கும் முயற்சியை மேற்கொண் டிருப்பதால் இந்தப் பட்டப் படிப்பிற்கு வாஞெலியைப் பயன் படுத்தலாம் என்ற முயற்சியும் இருக்கிறது. கடிதப்போக்கு வரத்தோடு வாஞெலியிலே குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிச் சிறந்த பேராசிரியர்கள் சிலரை வைத்து அதன் மூலம் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கச் சொன்ஞல் கடிதப்போக்குவரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். எனவே வாஞெலியின் மூலம் கல்வி கற்பிக்கின்ற சூழ்நிலையை மேற்கொள்ளலாம்.